**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 286/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ரத்தினசாமி | நாள் | 25.01.2023 |
| தகப்பனார் பெயர் | சின்னப்ப கவுண்டர் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

9) என் வண்டி பாதையை பிரதிவாதி பயன்படுத்தக்கூடாது என்றும், நான் பயன்படுத்துவதை தடுக்கக்கூடாது என்றும் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும்.

10) தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் காணப்படும் கையெழுத்து என்னுடையதுதான். என் வழக்குரையில் பிரதிவாதி தாவா தடவழிப்பாதை வழியாக போககூடாது என நான் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால், கோரவில்லை. ஆனால், பிரதிவாதி என்னுடைய தடவழிப்பாதையையும் பயன்படுத்தக் கூடாது என்பதுதான் என் வழக்கின் நோக்கம்.

11) இவ்வழக்கை பிரதிவாதிதான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. நான்தான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆணையர் நியமிக்க நான் மனுதாக்கல் செய்தேன் என கூறியுள்ள நிலையில் மேற்படி மனுவின் எண் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. இவ்வழக்கில் எத்தனை முறை நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றால், ஒரு முறை தான் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இ.ம.எண்.363/2016 ல் மனுதாரர் மாரப்பன், எதிர்மனுதாரர் ரத்தினசாமி. மேற்படி நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை தவிர இவ்வழக்கில் என் முதல் விசாரணை சாட்சியத்தில் வேறு எந்த அறிக்கையையும் நான் குறியீடு செய்யவில்லை என்றால், சரிதான். இந்நிலையில் நான் சொல்வது போல் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

12) அ.வ.எண்.09/2005 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பின்பு முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி வழக்கிலுள்ள மற்ற தரப்பினரையும் சேர்த்துக்கொண்டு பிரதிவாதியை தாவா தடவழியை பயன்படுத்தக் கூடாது என்ற நோக்கத்தில் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

13) நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி நான் படி எதுவும் கட்டவில்லை என்றாலும், பிரதிவாதிதான் நடவடிக்கை எடுத்துள்ளார் என்றாலும், சரியல்ல, நான் மூன்று முறை படி கட்டியுள்ளேன்.

14) ச.எண்.1052/3 ஆனது கிணறாக இருந்து மூடப்பட்ட பகுதி என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் உள்ள மாதிரி வரைபடத்தில் ச.எண்.1052/3 க்கு வடபுறம் ச.எண்.1052/2 ம், தென்புறம் ச.எண்.1052/4 ம் உள்ளது என்றால், ச.எண்.1052/3 க்கு வடபுறம் ச.எண்.1052/1 தான் உள்ளது, ச.எண்.1052/2 இல்லை. மேற்படி ஆணையரின் வரைபடத்திலும், அறிக்கையிலும் அவ்வாறு தவறாக உள்ளது என இதுவரையில் நான் ஏதேனும் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்கு சரியாக நினைவில்லை.

15) தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் மரக்கலரில் (Brown) கண்டுள்ளவாறு மண்சாலை தார் ரோட்டிலிருந்து வடபுறம் தொடங்கி வரைபடத்தில் கண்டுள்ளவாறு செல்கிறது என்றால், சரிதான்.

16) பிரதிவாதி இவ்வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டு தான் என் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6 ல் நான் மேற்படி பிரதிவாதியின் பதிலுரையில் கூறியுள்ள சங்கதிகளில் ஒத்துக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை குறிப்பாக மறுக்கிறேன் என சொல்லிவிட்டு தற்போது எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

17) தற்போது என்னிடம் காட்டப்படும் என் பிரமாண பத்திரத்தில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி பிரமாண பத்திரத்தில் பத்தி 6 ல் கண்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.